செ.வெ.எண்:04/ஜூன் நாள்:03.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், மதுரைக் கோட்டம் மூலம் "அனைவருக்கும் வீடு" திட்டத்தின் கீழ் ரூ.21.12 கோடி மதிப்பில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள இடத்தினை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்டம், பட்டணம் காத்தான் ஊராட்சியில் இன்று (03.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், மதுரைக் கோட்டம் மூலம் "அனைவருக்கும் வீடு" திட்டத்தின் கீழ் ரூ.21.12 கோடி மதிப்பில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், மதுரைக் கோட்டம் மூலம் "அனைவருக்கும் வீடு" திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.21.12 கோடி மதிப்பில் பட்டணம் காத்தான் ஊராட்சியில் உள்ள சத்யா நகர் பகுதியில் 98 கான்கிரீட் குடியிருப்புகளும், பாம்பூரணி பகுதியில் 76 கான்கிரீட் குடியிருப்புகளும்,பெரியார் நகர் பகுதியில் 37 கான்கிரீட் குடியிருப்புகளும், மதுரை வீராசாமி கோவில் தெரு பகுதியில் 45 கான்கிரீட் குடியிருப்புகளும் கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டமானது ஆட்சேபகரமான அரசு நிலங்களில் (நீர்நிலை புறம்புகள் உள்ளிட்ட பகுதிகள்) வசித்து வரும் குடிசைவாழ் மக்களை மறுகுடியமர்வு செய்ய ஏதுவாக செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகள் ஒவ்வொன்றும் ஒரு வசிக்கும் அறை, ஒரு படுக்கை அறை, ஒரு சமையல் அறை, ஒரு குளியல் அறை மற்றும் ஒரு கழிப்பறை ஆகிய வசதிகளுடன் 390 சதுர அடி பரப்பளவில் கட்டப்படுகிறது. ஒவ்வொரு குடியிருப்பு கட்டுவதற்கான தோராய மதிப்பு ரூ.8.25 இலட்சம் ஆகும். இதில் 50 சதவீதம் மத்திய அரசின் மானியமாகவும், 40 சதவீதம் மாநில அரசின் மானியமாகவும், இதர 10 சதவீதம் (ரூ.82,500/-) பயனாளிகளின் பங்குத்தொகையாகும். எனவே, இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள பயனாளிகள், பயனாளிகள் பட்டியலில் தங்களது பெயர் இடம் பெற்றுள்ளதை உறுதி செய்து பயனாளிகளின் பங்குத்தொகையான ரூ.82,500/- னை காலதாமதமின்றி செலுத்திட வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதுபோன்று, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம் பயனாளிகள் தாங்களாக வீடு கட்டும் திட்டம் என்ற திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட இந்திரா நகர் பகுதியில் மொத்தம் ரூ.350.70 இலட்சம் மதிப்பில் 167 கான்கிரீட் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் பெறப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்வு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு குடியிருப்பு கட்டுவதற்கான பணி உத்தரவுகளை வழங்குவதற்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. விரைவில் பயனாளிகள் அனைவருக்கும் கான்கிரீட் குடியிருப்புகள் வழங்குவதற்கான பணி உத்தரவுகள் வழங்கப்படும்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பட்டணம்காத்தான் ஊராட்சியில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள 144 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு நேரிடையாக சென்று பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மதுரைக் கோட்ட நிர்வாக பொறியாளர் திரு.ந.பாண்டியராஜன் , இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.ராஜசேகர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய உதவி செயற்பொறியாளர் திரு.அசோகன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.குருதிவேல் மாறன் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**